உதவி அமர்வு/சார்பு நீதிமன்றம், கோவில்பட்டி.
எஸ்சி.எண்.345/2016

| | | |
|---|---|---|
| பெயர் | .. | ராதிகா (அசா1) |
| த/பெ. க/பெ. | .. | |
| கிராமம் | .. | |
| தாலுகா | .. | |
| தொழில் | .. | |
| ஜாதி | .. | |
| மதம் | .. | |
| வயது | .. | |

1873ம் வருடத்திய இந்திய சாட்சிய சட்டத்தின் பிரகாரம் 2018ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 26 ம் நாள் இந்நீதிமன்ற உதவியாளரால் மேற்படியாரிடம் சத்திய பிரமாணம் பெறப்பட்டது.
26/09/2018

முதல் விசாரணை:-

நான் கங்கன்குளம் கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். எனக்கு திருமணம் ஆகிவிட்டது. எனது கணவர் ஜேசிபி டிரைவராக இருந்தார். தற்போது ஆட்டோ ஓட்டுகிறார். 06.11.2015 ஆம் தேதி காலை 11.00 மணியளவில் நான் வீட்டின் சமையல் அறையில் இருந்த போது கத்தியினால் கொன்றுவிடுவேன் என கூறி கத்தியை காண்பித்து ஒரு நபர் என்னை மிரட்டி கழுத்தில் இருந்த செயினை அத்துக்கொண்டு என்னை தள்ளிவிட்டு ஓடிவிட்டார். ஆஜர் எதிரி பழனிசாமி தான் அந்த நபர். என்னிடம் இருந்து பறிக்கப்பட்ட செயின் 2பவுண். மேற்படி செயினை அடகு வைத்துள்ளதால் இன்று விசாரணைக்கு மேற்படி செயினை கொண்டுவரவில்லை. சம்பவத்திற்கு பின்பு கோவில்பட்டி மேற்கு காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளரிடம் புகார் கொடுத்தேன். நான் கொடுத்த புகார் மனு அசாஆ1. நான் புகார் கொடுத்த பின்பு எனது வீட்டிற்கு வந்து வீட்டின் முன்பு கிடந்த கத்தியை கைப்பற்றினார். 27.07.2016ம் தேதி ஆய்வாளர் என்னை காவல் நிலையம் வரச்செய்து செயினை பறித்து சென்ற நபரையும் பறித்து சென்ற செயினையும் கைப்பற்றிய கத்தியையும் அடையாளம் காட்டச்சொன்னார்கள். 22.08.2016ம் தேதி பாளையங்கோட்டை ஸ்டேசனில் சம்பந்தப்பட்ட நபரை நீதிபதி முன்பாக அந்த நபரின் உடைகளை மூன்றுமுறை மாற்றிவந்து அடையாளம்

காட்டச்சொன்னார்கள். நான் நீதிபதி முன்பாக அடையாளம் காட்டினேன். இது சம்பந்தமாக என்னை போலீசார் 2,3 முறை விசாரித்தார்கள். காவல்நிலையத்தில் இருந்தும் அடிக்கடி என்னை விசாரித்தார்கள். போலீசார் விசாரணையில் நான் மேலே சொல்லியுள்ள சங்கதிகளை சொல்லியுள்ளேன். சம்பவத்தின் போது எதிரியால் பயன்படுத்தப்பட்ட கத்தி அசா1ஆல் அடையாளம் காட்டப்பட்டது அது சாபொ1.

(நீதிமன்றத்தில் இருந்து பெற்றுக்கொண்டு சென்ற செயின் கொண்டுவரும் பொருட்டு சாட்சி பிணைந்து அனுப்பப்படுகிறது.)

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு வாசித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒம்)A.K.பாபுலால்,
சார்பு நீதிபதி,
கோவில்பட்டி.